**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.736/2010 பி.வா.சா.3 மருதாசலம்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.01.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | மருதாசலம் | தொழில் | - | |
| த/பெ க/பெ | - | லேட். சின்னசாமி | ஜாதி | - | |
| கிராமம் | - | பெதப்பம்பட்டி | வயது | - | 65 |
| தாலூக்கா | - | உடுமலை | தேதி | - | 27.01.2026 |

முதல் விசாரணை

நான் பெதப்பம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **சா.சா.ஆ.1** | பி.வா.சா. 3 ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்ட நகல் |

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1) ஸ்ரீ தண்டாயுதபாணி ரைஸ் & ஆயில் மில் உரிமையாளர் யார் என்றால் K.N. கிருஷ்ணசாமி ஆவார். அந்த மில்லை கிருஷ்ணசாமி தான் நடத்தி வந்தார் என்றால் சரிதான். நான் எந்த ஆண்டிலிருந்து அந்த மில்லில் வேலை செய்தேன் என்றால் நான் 9 ம் வகுப்பு படித்த போது அங்கு வேலையில் சேர்ந்தேன். 1986 ல் இருந்து அங்கு வேலை செய்தேன். என்னை கிருஷ்ணசாமி தான் பணியமர்த்தினார் என்றால் சரிதான். வாதிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வேலை செய்த காலத்தில் வாதிகள் அந்த மில்லுக்கு வந்தார்களா என்றால் இல்லை.

2) மில்லை ஒட்டிய 50 செண்ட் இடத்தை கிருஷ்ணசாமி வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். கிருஷ்ணசாமியின் சுய சம்பாத்தியத்தில் தான் அந்த இடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மில்லில் களம், சுற்று சுவர் ஆகியவை அமைக்கப்படும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். அதனை கட்டிய மேஸ்திரியை எனக்கு தெரியுமா என்றால் முனுசாமி கட்டினார். கிருஷ்ணசாமியும் அவரது மனைவி மாரியம்மாளும் சேர்ந்து தான் அந்த மில்லை மேம்படுத்தி பராமரித்து வந்தார் என்றால் சரிதான். மாரியம்மாள் 1986 வரை உடன் இருந்து மில்லை பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.

6 ம் மற்றும் 7 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை

**( 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி